# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 19.08.2025**

**அசல் வழக்கு எண். 188/2018**

**வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் எந்த சர்வே நம்பரில் உள்ள சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் சர்வே எண்.353 ல் உள்ள சொத்தை கிரையம் பெற்றேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணம் என்னால் பெறப்பட்ட கிரைய ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மால்களுள் ஒன்றாக பாதை குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை. முதல்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. முத்துப்பாண்டிதேவர் என்பவருடைய மனைவியான தவசிக்கண்ணம்மாள் என்பவருடைய இடம் நான் கிரையம் பெற்ற மனை வரிசையில் கடைசியில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி தவசிக்கண்ணம்மாள் பெற்ற கிரைய ஆவணத்தில் நான்கு மால்களுள் ஒன்றாக பாதை குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. முத்துசாமிஆசாரி குமாரர் கருப்பசாமி ஆசாரி என்பவர் நான் கிரையம் பெற்ற இடத்தின் வரிசையில் அவரும் கிரையம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கருப்பசாமி ஆசாரி பெற்ற கிரைய ஆவணத்திலும் நான்கு மால்களுள் ஒன்றாக பாதை குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

2. நான் இவ்வழக்கில் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது இடத்திற்கு முன்பு உள்ள கிழமேல் நடைபாதை பொறுத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது இடம் இருக்கும் வரிசையில் உள்ள இடங்களை கிரையம் பெற்றவர்கள் அனைவரும் மேற்கூறிய கிழமேல் நடைபாதையை பயன்படுத்துகிறார்கள் என்றால் சரிதான். மேற்கூறிய கிழமேல் நடைபாதையை தவிர்த்து வேறு பாதை உள்ளது என்றாலும், நான் பிரதிவாதிகளின் இடத்தை ஆக்கிரமிப்பு செய்து பாதை உள்ளது என்று பொய்சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் கிரையம் பெற்ற இடத்தின் வரிசையில் உள்ள மற்ற இடங்களின் கிரையதாரர்கள் பெற்ற கிரைய ஆவணங்களிலும் நானகு மால்களுள் ஒன்றாக பாதை குறிப்பிடப்படவில்லை என்றாலும், மேற்படி கிரையதாரர்கள் வேறு பாதையை பயன்படுத்தி வருகிறார்கள் என்றாலும், நான் பிரதிவாதிகளின் இடத்தை ஆக்கிரமிப்பு செய்து பாதை உள்ளது

என்று பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் கிரையம் பெற்ற இடத்தில் வரிசையில் உள்ள மற்ற கிரையதாரர்கள் வேறு பாதையை பயன்படுத்தி வருவதால் வழக்கு தபசில் பாதையை பொறுத்து அவர்கள் வழக்கு தாக்கல செய்யவில்லை என்றால் சரியல்ல.

3. நான் எந்த வருடத்தில் கிரையம் பெற்றேன் என்றால் 1984ம் வருடம் கிரையம் பெற்றேன். நான் கிரையம் பெற்ற சமயத்தில் சர்வே எண்.353 உள்ள இடத்திற்கு கிழமேல் நடைபாதை உள்ளதை உறுதிப்படுத்தியபின்பும், மேற்படி பாதை குறித்து அரசாங்க வருவாய்த்துறை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்தியபின்பும் கிரையம் பெற்றேனா என்றால் கிரையம் கொடுத்தவர்கள் கிழமேல் நடைபாதை உள்ளது என்று கூறியதன்பேரில் நான் கிரையம் பெற்றேன். நான் கிரையம் பெற்ற சமயத்தில் கிழமேல் நடைபாதை உள்ளது பற்றி கிரையம் கொடுத்தவர்கள் சொன்னதன்பேரில் மட்டும் கிரையம் பெற்றேனா அல்லது மேற்படி நடைபாதை குறித்து அரசாங்க வருவாய்த்துறை ஆவணம் எதிலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சரிபார்த்தபின்பு கிரையம் பெற்றேனா என்றால் கிரையம் கொடுத்தவர்கள் சொன்னதன்பேரில் கிரையம் பெற்றேன்.

4. நான் கிரையம் பெற்ற நபர்கள் மனைகளாக பிரிவினை செய்ததற்கான திட்ட ஒப்புதல் போன்ற ஆவணம் ஏதும் நான் பார்த்தேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கையுடன் கூடிய சர்வே எண்.353க்கான புலவரைபடத்தில் நான் வழக்குரையில் கூறியவாறு பாதை ஏதும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் பாதை என்று குறிப்பிட்டு எழுதப்படவில்லை. நான் கிரையம் வாங்கிய இடத்தில் வீடு ஏதும் கட்டியுள்ளேனா என்றால் இல்லை. நான் கிரையம் பெற்றபிறகு வழக்கு தபசில் பாதை ஸ்தலத்தில் உள்ளதுபற்றி வருவாய்த்துறை ஆவணங்களிலோ அல்லது சர்வே எண்.353க்கான திட்ட ஒப்புதலையோ நான் பார்த்தேனா என்றால் நான் கிரையம் பெற்ற பிறகு ஸ்தலத்தில் பாதை உள்ளதை மட்டும் பார்த்தேன். நான் இவ்வழக்கு தாக்கல் செய்தபிறகு வழக்கு தபசில் பாதை குறித்து வருவாய்த்துறை ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும் சர்வே எண்.353க்கான திட்ட ஒப்புதலையும் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. ஸ்தலத்தில் பாதை அமைப்பு இல்லை

என்றாலும், மற்ற கிரையதாரர்கள் வேறு பாதையை பயன்படுத்துகிறார்கள் என்றாலும், வழக்கு தபசில் பாதை இருப்பதாக பொய் கூறி இவ்வழக்கை பிரதிவாதிகளுக்கு எதிராக நான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. மற்ற கிரையதாரர்கள் வேறு பாதையை பயன்படுத்திவருவதால் வழக்கு தபசில் பாதை குறித்து அவர்கள் வழக்கு தாக்ல செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்குரையில் கூறியுள்ள பாதை ஸ்தலத்தில் இருந்திருந்தால் அது பற்றி திட்ட ஒப்புதலிலோ அல்லது வருவாய்த்துறை ஆவணங்களிலோ குறிப்பிடப்பட்டிருககும் என்றாலும், மேற்கூறிய பாதை ஸ்தலத்தில் இல்லாததால் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரியல்ல.

5. 1 முதல் 3 பிரதிவாதிகள் நான் கிரையம் பெற்ற அன்னத்தாயின் பிள்ளைகள் என்றால் சரிதான். மேற்படி அன்னத்தாயின் தாயார் பெயர் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வழககுரை தபசில் சொத்துக்கள் 1 முதல் 3 பிரதிவாதிகளின் பாட்டியான அன்னம்மாள் என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். மேற்படி அன்னம்மாளுக்கு பூர்வீகமாக பாத்திய்பபட்டட சொத்துக்களில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பங்கு உள்ளது என்றால் அன்னத்தாய் எங்களுக்கு கிரையம் கொடுத்த சொத்து பொறுத்து 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு உரிமை இல்லை. 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு அன்னம்மாளின் சொத்துக்கள் பொறுத்து உரிமை உள்ளது என்றாலும், அதனால் நான் அன்னத்தாயிடமிருந்து பெற்ற கிரையம் செல்லாது என்றாலும் சரியல்ல. நான் அன்னத்தாயிடம் பெற்ற கிரைய சொத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகளின் பங்குகள் பொறுத்து எனக்கு எந்த உரிமையும் ஏற்படாது என்றால் சரியல்ல.

6. இவ்வழக்கில் வழக்கு தபசில் பாதை பொறுத்து நான் கோரிய தற்காலிக உறுத்துக்கட்டளை மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. ஸ்தலத்தில் வழக்கு தபசில் பாதை இல்லை என்பதாலும், வழக்கு தபசில் பாதை பொறுத்து பிரதிவாதிகள் இடையூறு செய்யாததாலும் மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி தற்காலிக உறுத்துக்கட்டளை மனு தள்ளுபடி செய்யப்பட்டதை எதிர்த்து நான் மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யாததற்கு காரணம் ஸ்தலத்தில் பாதை இல்லாததால்தான் என்றால் சரியல்ல.

ஸ்தலத்தில் பாதை இல்லை என்றாலும், 1 முதல் 3 பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற நோக்கில் இவ்வழகை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

**4,5,6 மற்றும் 8,9 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**